மின்னிதழ்
# தேசியம்
THESIYAM තේසියම්
www.thesiyamnews.com

மலர்: 02 | குரல்: 137 | வள்ளுவர் ஆண்டு 2054 | வெள்ளிக்கிழமை 19.01.2024 | பக்கங்கள் 09

Smart Fly
ARUN WINGS
TRAVELS & TOURS
கடவுச் சீட்டு / வீசா சேவை / ETA வீசா / பயணக் காப்பீடு
விடுமுறை பயணத்தொகுப்பு / பயணத்திட்டம்
ARUN WINGS TRAVELS & TOURS (Pvt) Ltd
143, Temple Road, Jaffna. Tel: 076 8472458, 076 6668680
arunwingslanka@gmail.com



## உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் சூத்திரதாரிகள் ராஜபச்ச குடும்பமே!

### கஜேந்திரகுமார் காட்டம்!

பக்கம்–02



## இராணுவத்தை காட்டிக் கொடுத்து தமிழ் வாக்குகளைப் பெற முயலும் ரணில்!

### விமல் குற்றச்சாட்டு!

பக்கம்–03

## பொங்கு தமிழ் மக்கள் பேரெழுச்சிப் பிரகடனத்தின் 23ஆம் ஆண்டு எழுச்சி நாள்!





பக்கம்–05

HE & SHE FASHIONS
Ultimate Destination for FASHIONS



NO. 323, 309, KASTHURIYAR ROAD, JAFFNA.

# உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் சூத்திரதாரிகள் ராஜபச்ச குடும்பமே! கஜேந்திரகுமார் காட்டம்!




உயிர்த்த ஞாயிறு போன்ற ஒரு தேசிய பாதுகாப்பு பிரச்னையை உருவாக்கியதே ராஜபக்ச குடும்பம் தான் என நாடு மக்கள் தெரிந்து கொண்டுள்ளார்கள் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி யின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

யாழில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பொன்றில் கலந்துக்கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.
அவர் மேலும் கூறுகையில், உயிர்த்த ஞாயிறு தாக்குதலானது இலங்கையில் ஒரு தேசிய பாதுகாப்பு பிரச்சினையை தோற்றுவித்திருந்தது.

கோட்டாபய ராஜபக்சவை ஆட்சிக்கு கொண்டு வரும் நோக்கில் ராஜபக்ச குடும்பமே இவ்வாறானதொரு பிரச்சினையை உருவாகியுள்ளது என தற்போது அம்பலமாகியுள்ளது என தெரிவித்துள்ளார்.

# உள்ளூர் உற்பத்திகளை அதிகரித்து சுய பொருளாதாரத்தை வலுப்படுத்த முடியும்: அமைச்சர் டக்ளஸ்!

சுயதொழில் முயற்சிகளை விருத்தி செய்வதன் ஊடாக உள்ளூர் உற்பத்திகளை அதிகரித்து முயற்சியாளர்களின் சுய பொருளாதாரத்தை வலுப் படுத்த முடியும் என கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சுட்டிக்காட்டியுள்ளார்.

யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று சுயதொழில் முயற்சியாளர்களை வலுப்படுத்தும் நோக்கில் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

சுயதொழில் முயற்சிகளை விருத்தி செய்வதனூடாக பொருளாதார வளர்ச்சியில் ஒவ்வொரு குடிமகனின் பங்களிப்பு இருப்பதற்கு ஏதுவான நிலைமை உருவாகும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.
குறித்த கலந்துரையாடலில் சுயதொழில் முயற்சியாளர்கள் தாம் எதிர் நோக்கியுள்ள தொழில்சார் நடைமுறை பிரச்சினைகளையும், வங்கிகள் ஊடாக கடன் வசதிகளை பெற முற்படும் போது ஏற்படும் இறுக்கமான நடைமுறைகளால் ஏற்படும் அசௌகரியங்கள் குறித்தும் அமைச்சரிடம் சுட்டிக்காட்டியிருந்தனர்.
தொடர்ந்து, உள்ளூர் உற்பத்திகளை மேம்படுத்துவதற்கான முதலீடுகளை எதிர்பார்க்கின்ற சுயதொழில் முயற்சியாளர்கள் அதற்கான திட்ட முன்மொழிவுகளை சமர்ப்பிக்கும் பட்சத்தில் அதற்கான ஒத்துழைப்பினையும் வழிகாட்டல்களையும்



வழங்க முடியும் என அமைச்சர் தெரிவித்துள்ளார்.
அத்துடன், சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில் முற்சிகளை ஊக்குவிப்பதற்கு வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ள நிதியில் இருந்து நன்மைகளை பெற்றுக் கொள்வதற்கான முன்மொழிவுகளையும் வழங்க முடியும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

குறித்த கலந்துரையாடலில் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர், மேலதிக அரசாங்க அதிபர், மாவட்டச் செயலக பதவிநிலை உத்தியோகத்தர்கள், துறைசார் அதிகாரிகள், வங்கிகளின் முகாமையாளர்கள் மற்றும் சுயதொழில் முயற்சியாளர்கள் என பலரும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# இராணுவத்தை காட்டிக் கொடுத்து தமிழ் வாக்குகளைப் பெற முயலும் ரணில்! விமல் குற்றச்சாட்டு!



தமிழர்களுடைய வாக்குகளை பெறுவதற்கு ரணில் விக்ரமசிங்க இராணுவத்தினரை காட்டிக் கொடுக்கும் சட்டங்களை இயற்ற முயற்சிக்கிறார் என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

கொழும்பில் உள்ள தேசிய சுதந்திர முன்னணியின் காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.
பொருளாதார நெருக்கடியால் ஒட்டுமொத்த மக்களும் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் நாட்டுக்கு எதிரான கீழ்த்தரமான செயற்பாடுகளை ரணில் விக்ரமசிங்க, முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஸ ஆகியோர் முன்னெடுத்துள்ளனர்.
2015 ஆம் ஆண்டு அப்போதைய வெளிவிவகாரத் துறை அமைச்சர் மங்கள சமரவீர இலங்கைக்கு எதிராக கொண்டு வரப்பட்ட 30 ஷ1 தீர்மானத்துக்கு இணை அனுசரனை வழங்கினார்.
இந்த தீர்மானத்தை நாட்டு மக்களும், நாடாளுமன்றமும் அப்போது அறிந்திருக்கவில்லை. நாட்டுக்கு எதிராக ஒப்பந்தங்கள் மற்றும் தீர்மானங்களில் இருந்து விலகுவதாக 2019 ஆம் ஆண்டு அதிபர் தேர்தல் காலத்தில் ராஜபக்ஸர்கள் மக்களுக்கு வாக்குறுதி வழங்கினார்கள்.
அந்த வாக்குறுதிகளுக்கு அமைய கோட்டபய ராஜபக்ஸ தலைமையிலான அரசாங்கத்தை நாட்டு மக்கள் தோற்றுவித்தார்கள். இலங்கைக்கு எதிராக கொண்டு வரப்பட்ட 30   1 தீர்மானத்துக்கு இணையனு ணசரனை வழங்கும் இணக்கப்பாட்டில் இருந்து இலங்கை விலகியுள்ள நிலையில் அந்த தீர்மானத்தில் குறிப்பிடப்பட்ட முக்கிய விடயங்களில் பல சட்ட வகிபாகத்துடன் தற்போது நிறைவேற்றப்பட்டுள்ளன. தமிழரை ஆளத் தடுத்தீர்கள் சிங்களவரும் வாழ முடியாது போகிறதே! தமிழரை ஆளத் தடுத்தீர்கள்  சிங்க ஆகவே இராணுவத்தினருக்கு எதிராக எவர் வேண்டுமானாலும் குற்றச்சாட்டுக்களை முன்வைக் கலாம். பொய்சாட்சியம் வழங்கலாம். சரத் பொன் சேகாவை தவிர ஏனைய இராணுவ அதிகாரிகளுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்ய முடியும்.
தமிழ் மக்களின் வாக்குகளை பெற்றுக்கொள்வதற்காக அதிபர் ரணில் விக்ரமசிங்க இராணுவத்தினரை காட்டிக் கொடுக்கும் வகையில் செயற்படுகிறார்.
ஆச்சரியம் என்னவென்றால், யுத்த வெற்றியை பிரதான தேர்தல் பிரசாரமாக கொள்ளும் ராஜபக்ஸர்கள் இராணுவத்தினருக்கு எதிரான சட்டமூலங்களுக்கு ஆதரவாக செயற்படுகிறார்கள். ஆகவே இந்த சட்டமூலத்துக்கு எதிராக ஒட்டுமொத்த மக்களும் ஒன்றிணைய வேண்டும் என்றார்.

# வேலணையில் சட்டவிரோத செயற்பாடுகள்; கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுங்கள்!

## நீதி அமைச்சரிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், வேலணைப் பிரதேசத்தில் இடம்பெறும் சட்டவிரோத செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துமாறு நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவிடம் வேலணைப் பிரதேச பொது அமைப்பினுடைய பிரதிநிதி கோரிக்கை விடுத்துள்ளார்.

தென்மராட்சியில் அமைந்துள்ள பனை ஆராய்ச்சி நிறுவனத்தில் நீதி அமைச்சருக்கும் கிராம மட்ட சகவாழ்வு மன்ற உறுப்பினர்களுக்கும் இடையிலான சந்திப்பு இடம்பெற்றபோதே வேலணை கிழக்கு மத்தி கிராமத்தின் பிரதிநிதி இந்தக் கோரிக்கையை அமைச்சரிடம் முன்வைத்திருந்தார்.

இது தொடர்பாக வேலணை கிழக்கு மத்தி கிராம பிரதிநிதி கருத்துத் தெரிவிக்கையில்,

வேலணை பிரதேசத்தில் கடற்தொழில் மற்றும் விவசாயம் ஆகியன பிரதான தொழில்களாக உள்ளன.

கால்நடை வளர்ப்பின் ஊடாக அதிக மக்கள் வருமானம் ஈட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் சட்டவிரோதமாகக் கால்நடைகளைத் திருடி இறைச்சியாக்கும் சம்பவங்கள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன.

குறிப்பாகப் பசு மாடுகள் மற்றும் கன்றுத் தாச்சி மாடுகளை திருடி ஈவிரக்கமின்றி இறைச்சியாக்கின்றனர்.

தினமும் சராசரியாக 3 மாடுகள்வரை இவ்வாறு இறைச்சியாக்கப்படுகின்றன. இதனால் மக்கள் வாழ்வாதார ரீதியாக வெகுவாகப் பாதிக்கப்படுகின்றனர்.

இது தொடர்பாகப் பிரதேச செயலக மற்றும் மாவட்ட மட்ட கலந்துரையாடல்கள்வரை கொண்டு சென்றுள்ள போதிலும் இன்றுவரை தீர்வு கிடைக்கவில்லை.

அத்துடன் வேலணை நீர்வளம் குறைந்த பிரதேசமாக உள்ளது. நீர் வளத்தைப் பாதுகாக்க வேண்டிய தேவைப்பாடு உள்ளது. இருப்பினும் சட்டவிரோத மணல் அகழ்வு அதிகளவில் இடம்பெறுவதால் குடி தண்ணீர் உவர் நீராக மாறி வருகின்றது.

1990-2019 காலப் பகுதிக்கு இடையில் வேலணையில் 70 சதவீதமான நன்னீர் கிணறுகள் உவர் நீராக மாறிவிட்டன. எனவே வேலணை மக்களுக்கு பாரிய சவால்களாக காணப்படுகின்ற கால்நடைத் திருட்டு மற்றும் மணல் அகழ்வு ஆகியவற்றை உரிய திணைக்களங்கள் ஊடாக கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.- என்றார்.

# மருத்துவர்களின் சம்பளம் 35000 ரூபாவினால் அதிகரிக்கப் பட்டதாக கண்துடைப்பு..

## வைத்திய நிபுணர் முரளி வல்லிபுரநாதன் தெரிவிப்பு!




அண்மையில் அரசாங்க சேவையில் உள்ள மருத்துவர்களின் சம்பளம் 35000 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டதை அடுத்து ஏனைய சுகாதார தொழில் சங்கங்கள் தமக்கும் 35ஆயிரம் ரூபா அதிகரிப்பு தரவேண்டும் என 2 நாள் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

ஊழலினால் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சிக்கு பின்னர் பதவிக்கு வந்த அரசியல் தலைமைகள் சர்வதேச நாணய நிதிய பரிந்துரை என்ற பெயரில் ஒரு இலட்சம் ரூபாய்களுக்கு மேல் மாத சம்பளம் பெறும் அரசாங்க ஊழியர்களின் மீது அதிகரித்த வரி விதித்து.

அரசாங்க மருத்துவர்களின் சம்பளத்தில் சராசரியாக 35ஆயிரம் ரூபாய்களுக்கு அதிகமாக வரியாக கழிக்கப்பட்டது.

ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும்போது இலங்கையில் குறைந்தளவு சம்பளம் பெறும் மருத்துவர்கள், சம்பளம் குறைக்கப்பட்ட இந்த செயலால் அதிருப்தி அடைந்து ஆயிரக்கணக்கில் நாட்டை விட்டு வெளியேற தொடங்கினார்கள்.

இதனால் பல வைத்தியசாலைகள் செயலிழுந்துள்ள நிலையில் கலக்கமடைந்த ஆட்சியாளர்கள் இதை ஈடு செய்ய- அதாவது அண்மைக்கால வரிவிதிப்புக்கு முன்னர் இருந்த நிலைக்கு வைத்தியர்களது சம்பளமாகப் பெறும் தொகையினை கொண்டு வருவதற்கு 35 ஆயிரம் வழங்க-தீர்மானித்து விட்டு அதை தான் 35ஆயிரம் ரூபாய்களினால் மருத்துவர்களின் சம்பளம் அதிகரிப்பதாக கண்துடைப்பு செய்கிறார்கள்.

உண்மையில் இது சம்பள அதிகரிப்பு அல்ல உதாரணமாக ஒரு மருத்துவ நிபுணரின் சம்பளம் வரியினால் 40000 ரூபாய்களினால் குறைக்கப்பட்டு இருந்தது. இப்போது 35000 ரூபாய் வருமான அதிகரிப்பு என்று கூறிக்கொண்டு மேலும் வரிவிதிப்பை மொத்த சம்பளத்தில் அதிகரிப்பார்கள்.

இதனால் உண்மையான அதிகரிக்கும் அளவு 25 000 ஆக இருந்தாலும் வரி விதிப்புக்கு முன்னர் இருந்ததை விட அவர் இன்னும் 15000 குறைவாகவே பெறுவார்.

இதேவேளை வரிவிதிப்புக்கு உட்படாத சம்பளத்தை பெறும் மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர்கள் (MLT) மற்றும் போராட்டத்தில் ஈடுபடும் ஏனைய தொழில் சங்க உறுப்பினர்கள் உயர்தரத்தில் 3 பாடம் சித்தியுடன் 1 அல்லது 2 வருடத்துக்கு மேற்படாத மாதாந்தக் கொடுப்பனவுடன் கூடிய சுகாதார திணைக்கள பயிற்சி நெறிகளை முடித்துவிட்டு தமது பணிநியமனங்களைப் பெற்றுக்கொண்டுள்ளனர்.

இடைநிலை சுகாதார ஊழியர்களான இவர்கள் தங்களை தாங்களே சுகாதார நிபுணர்கள் என்று அழைத்துக் கொண்டு, உயர்தரத்தில் சிரமப்பட்டு படித்து அதிகளவு புள்ளிகளை பெற்று எதுவித மாதாந்தக் கொடுப்பனவுகளும் இன்றி 5 வருடம் மருத்துவ பீட அடிப்படைக் கற்கைகளை நிறைவு செய்த பின்னர் 1 வருடம் உள்ளகப் பயிற்சி பெற்று வேலைக்கு அமர்த்தப் பட்டுள்ள மருத்துவர்களுக்கு சமனாக, வரிக்கு உட்படாத தமது சம்பளத்தையும் 35000 ரூபாய்களினால் அதிகரிக்குமாறு கேட்பது எப்படி நியாயம் ஆகும்?

மேலும் நாடு வெள்ள அனர்த்தம் மற்றும் டெங்கு பரவல் காரணமாக ஒரு பேரழிவை எதிர்நோக்கும் நேரத்தில் இவ்வாறான அநியாயக் கோரிக்கைகளை முன்வைத்து போராடுவது சுகாதார ஊழியர்களின் ஒழுக்க நெறிக்கு பொருத்தமானதா?

இன்றைய வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு, அனைத்து ஊழியருக்கும் அதிகரித்த சம்பளத்தை வழங்குவதை நியாயப்படுத்தி உள்ளது. ஆனால் சர்வதேச நாணய நிதியத்தின் பரிந்துரையான அரச செலவீனங்களை குறைப்பது என்பது பொருளா தாரத்தில் முன்னேறி வரும் ஏனைய நாடுகளை போல பாதுகாப்பு செலவீனங்களை குறைப்பது மூலமாக அடையப் பட்டிருக்க வேண்டும். ஆனால் பாதீட்டில் அண்ணளவாக 50ழு செலவை பாதுகாப்புக்கு ஒதுக்கிவிட்டு அதை சரி கட்டுவதற்கு அரச ஊழியர்களின் மீதான வரியை அதிகரிப்பது அவ தந்திரமாகும்.

வைத்தியர்களுக்கு வழங்கப்பட்டது போல சம்பள உயர்வு தமக்கு வழங்கவேண்டும் என்று கேட்கும் தொழில் சங்கங்கள் கூட பாதுகாப்பு செலவை குறைக்க வேண்டும் என்ற கோரிக்கையை வெளிப்படுத்தவில்லை என்பது கவனிக்கத்தக்கது.

அரச ஊழியர்களை செலவுகளை குறைத்து சிக்கனமாக இருக்க உபதேசிக்கும் அரசியல்வாதிகள் தொடர்ந்தும் ஊழலில் ஈடுபட்டு அதிகரித்த செலவுகளை ஏற்படுத்து கிறார்கள். சில தினங்களுக்கு முன்னர் கூட மகிந்த குழுவினர் வரி செலுத்து வோரின் பணத்தில் கப்பலில் பயணம் செய்து களியாட்டம் நடத்தினார்கள்

பாதுகாப்பு செலவை ஆட்சியாளர்கள் அதிகரித்த நிலையில் வைத்திருப்பதற்கு இலங்கை மீது அந்நிய .நாடுகள் எதுவும் படை எடுக்கவில்லை. வல்லரசுகள் இலங்கை மீது படையெடுக்க தேவையுமில்லை. ஏனென்றால் இலங்கை மக்களை சுரண்டி வல்லரசுகளுக்கு வருமானம் தரக்கூடிய அனைத்து வியாபாரங்களுக்கும் ஒத்துழைக்க ஆட்சியாளர்கள் தயாராக இருக்கின்றனர்.

அப்படி இருந்தும் அதிகரித்த பாதுகாப்பு செலவு ஏன் ஏற்படுகிறது என்ற கேள்விக்கான பதிலை தமிழர்கள் அதிகமாக வாழும் பகுதிகளில் குவித்து வைக்கப்பட்டுள்ள ஆயுதப்படையினர் மூலமாக அறிந்து கொள்ளலாம். கடந்த காலங்களில் இடம் பெற்ற தவறுகளை நேர்மையாக ஏற்றுக் கொண்டு பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்கி இனங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தி ஒன்றுபட்ட இலங்கைக்குள் கௌரவமான ஒரு தீர்வை வழங்குவதன் மூலமாகவே ஆயுதப்படை யினரை அங்கிருந்து அகற்ற முடியும்.

எது எப்படி இருந்தாலும் பாதுகாப்பு செலவீனத்தை குறைப்பதாலும் ஊழல் மிக்க அரசியல்வாதிகளில் இருந்து நாட்டை மீட்டு எடுத்தால் மாத்திரமே வைத்தியர்களுக்கு கண்துடைப்புக்காக வழங்கிய தொகையை விட அதிக சம்பள அதிகரிப்பைபெற முடியும் என்பதை அனைத்து அரசாங்க தொழிற்சங்கங்களும் உணர வேண்டும். அந்த நிலை ஏற்படுவதற்கு உரிய அழுத்தத்தை அனைத்து தொழிற்சங்கங்களும் ஒன்றிணைந்து பிரயோகிப்பதே சகல இலங்கையர்களும் தத்தமது சம்பள உயர்வை பெற்றுக்கொள்ளவும் நாட்டை பொருளாதார சீரழிவில் இருந்து நிரந்தரமாக மீட்டெடுக்கவும் உதவும் சாத்தியமான வழியாகும்.

# பொங்கு தமிழ் மக்கள் பேரெழுச்சிப் பிரகடனத்தின் 23ஆம் ஆண்டு எழுச்சி நாள்!



தமிழ் மக்களின் அபிலாசைகளை வடகிழக்கு தமிழர் தாயகம் தழுவி தமிழ் மக்கள் ஒன்று திரண்டு 2001 ஆண்டு வெளிப்படுத்திய "பொங்குதமிழ்" மக்கள் பேரெழுச்சிப் பிரகடனத்தின் 23ஆம் ஆண்டு எழுச்சி நாள் நிகழ்வுகள் 17.01.2024 (புதன்கிழமை) அன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சமூகத்தினால் நினைவு கூறப்பட்டது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் திரு.கு.துவாரகன் தலைமையில செயலாளர் சோ.சிந்துஜனின் ஒருங்கிணைப்பில் நடைபெற்ற நிகழ்வில் விரிவுரையாளர் திரு.ம.இளம் பிறையன் அவர்கள் உரையாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மேலும் எழுச்சிநாள் நிகழ்வில் பல்கலைக்கழக ஊழியர் சங்கத் தலைவர், செயலாளர் உள்ளிட்ட பல்கலைக்கழக ஊழியர்கள், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், அனைத்துப்பீடங்களினதும் மாணவர் ஒன்றியத் தலைவர்கள், மற்றும் பெருந்திரளான மாணவர்கள், ஊடகவியலாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.





தேசியம் பத்திரிகையின் மின்னிதழைப் பெற இவ் வாட்ஸ் ஆஃப் குழுவில் இணைந்து கொள்ளுங்கள்.

SCAN ME

# புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் வாக்குறுதியால் போராட்டம் ஒத்திவைப்பு!

## வர்த்தக சங்க தலைவர் த.நவநீதன் தெரிவிப்பு!




பிரதேச சபையின் வாக்குறுதியால் போராட்டம் ஒத்திவைக்கப்படுவதாகவும்,ஒரு மாத காலத்திற்குள் தீர்வினை பெற்றுத்தர தவறின் போராட்டம் வெடிக்கும் என புதுக்குடியிருப்பு வர்த்தக சங்கத்தின் தலைவர் நவநீதன் தெரிவித் தார்.

புதுக்குடியிருப்பு பிரதேசசபையின் , செயலாளர், வர்த்தக சங்கத்தின் தலைவர், செயலாளர், பொருளாளர், புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆகியோருக்கிடையில் நேற்றைய தினம் புதுக்குடியிருப்பு பிரதேசசபையில் கலந்துரையாடல் இடம்பெற்றிருந்தது.

குறித்த கலந்துரையாடலின் பின்னர் மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில்,

கடந்த 16ஆம் திகதி முல்லைத்தீவு ஊடக அமையத்தில் புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் வேவலைத் திட்டங்கள், செயற்பாடுகள் குறைவடைந்து இருந்தமையால் அது சார்ந்த விடயங்களை நாம் ஊடகத்தின் கவனத்திற்கு கொண்டு வந்திருந்தோம்.

அந்தவகையில் எமது கோரிக்கைகளிற்கு அமைவாக இன்றையதினம் புதுக்குடியிருப்பு பிதேச சபையின் செயலாளர், உப செயலாளர் எம்முடன் கலந்துரையாடி முடிவினை எடுப்பதற்கு அழைப்பு விடுத்திருந்தார்கள். அதற்கமைய கலந்துரையாடல் இடம்பெற்றது.

குறித்த கலந்துரையாடலின் பின் எங்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளை ஒருமாத காலத்துக்குள் நிறைவேற்றி தருவதாக புதுக்குடியிருப்பு பிரதேச சபையினரால் எழுத்து மூலம் ஒப்புதல் கடிதம் வழங்கியிருக்கின்றார்கள்.

இந்நிலையில் ஒரு மாத காலப்பகுதிக்குள் நிறைவேற்றி தருவார்கள் என்ற நம்பிக்கையின் அடிப்படையிலும் , எழுத்து மூல ஆவணத்தின் அடிப்படையிலும் நாளையதினம் நடாத்த இருந்த போராட்டத்தினை இடைநிறுத்தி ஒரு மாத கால அவகாசம் கொடுத்திருக்கின்றோம்.

குறித்த காலப்பகுதிக்குள் பிரச்சினைகளை தீர்த்து வைக்க தவறின் நாங்கள் மீண்டும் வர்த்தக சங்கத்தினை ஒன்றுதிரட்டி இவர்களுக்கு எதிரான போராட்டத்தினை நடாத்துவதில் எந்தவித மாற்றமும் இல்லை.

எங்களுக்கு தந்துள்ள வாக்குறுதிகள் ஒருமாத காலப்பகுதிக்குள் பல மாற்றங்களை ஏற்படுத்தும் என நம்புகின்றோம். ஏனெனில் கலந்துரையாடல் அவ்வாறானதாகவே அமைந்திருக்கின்றது. ஆதரவு தந்த அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்து கொள்வதாக மேலும் தெரிவித்தார்.

இன்றைய கலந்துரையாடலில் குறித்த விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டுள்ளதுடன் வர்த்தக சங்கத்தினருக்கு புதுக்குடியிருப்பு பிரதேசசபை செயலாளரினால் உத்தரவாதம் வழங்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு,

1) புதுக்குடியிருப்பு சந்தைத் தொகுதியில் ஏற்கனவே நில வாடகையில் வியாபாரம் செய்த 03 வியாபாரிகளுக்கு பிரதேச சபை 1987ம் ஆண்டு 15ஆம் இலக்க கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் நிரந்தர கடைகளை வழங்க முடியாததன் காரணத்தினால் அவர்களுக்கு பிரதேச சபையின் பொதுச் சந்தையினுள் உள்ள நிலவாடகை கடைகளினை ஒழுங்கமைத்து வியாபாரிகளுக்கு வியாபாரம் முன்னுரிமையான இடத்தில் நில வாடகையில் கடைகளை வழங்குதல் எனத் தீர்மானிக்கப்பட்டது.

2) புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் சிறுவர் பூங்காவில் இடம்பெறும் சட்டவிரோத செயற்பாட்டினை கட்டுப்படுத்துவதற்காக பொலிஸ் பிரிவு மற்றும் வர்த்தகர் சங்கத்தின் ஒத்துழைப்பு கோரப்பட்டதுடன் அதன் மூலம் குறித்த சட்ட விரோத செயற்பாடுகளை கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

3) புதுக்குடியிருப்பு நகரப் பகுதியில் பிரதான வாய்க்காலானது வீதி அபிவிருத்தி திணைக்களம் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபை என்பவற்றுக்கு உரித்தானதாக காணப்படுகின்றது. எனினும் குறித்த இரு திணைக்களத்தினர் வாய்க்கால் துப்பரவு பணிகளில் ஈடுபடாதவிடத்து வெள்ள அபாயத்திலிருந்து ஏற்படும் விளைவுகளை கருத்திற்கொண்டு பிரதேச சபை மூலம் தேவைப்படுமிடத்து இயந்திர வசதி செய்து கொடுப்பதாக தீர்மானிக்கப்பட்டது.

4) கட்டாக்காலி மாடுகளினை கட்டுப்படுத்தும் செயற்பாடுகளினை முன்னெடுப்பதற்கு வீதி அபிவிருத்தி அதிகார சபை நடவடிக்கை எடுக்காத காரணத்தினால் பிரதேச சபை என்ற ரீதியில் வீதி விபத்துக்களை தவிர்க்கும் முகமாகவும் போது மக்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களை கருத்திற்கொண்டு பிரதேச சபையினால் குறித்த நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போதும் ஏற்படும் இடர்பாடுகளை தவிர்ப்பதற்கும் வர்த்தகர் சங்கம் மற்றும் பொலிஸ் பிரிவு என்பனவற்றின் உதவி கோரப்பட்டது. அவர்களின் ஒத்துழைப்புடன் குறித்த செயற்பாடு மேலும் வினைத்திறனாக செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டது.

விளம்பர
தொடர்புகளுக்கு
Mobile : +94 777 163990

# அளம்பில் மாவீரர் துயிலும் இல்ல காணி சுவீகரிப்பு நடவடிக்கை பொதுமக்களால் தடுத்து நிறுத்தம்!





முல்லைத்தீவு மாவட்டத்தின் அளம்பில் மாவீரர் துயிலும் இல்ல காணியை தனிநபரிடமிருந்து இராணுவத்துக்கு சுபீகரிப்பதற்கான நில அளவீட்டு பணி இன்று இடம்பெறவிருந்த நிலையில் பொதுமக்களால் குறித்த அளவீட்டு பணிகள் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது

முல்லைத்தீவு நில அளவை திணைக்கள அதிகாரிகள் நில அளவீட்டு பணிக்காக துயிலும் இல்ல காணிக்கு சென்றபோது அங்கு கூடிய மக்கள் இந்த இடத்தில் நாம் எமது உறவுகளை புதைத்துள்ளோம் இந்த காணியை அளவிட அனுமதிக்க மாட்டோம் என்றதன் அடிப்படையில் அளவீட்டு பணிகள் நிறுத்தப்பட்டுள்ளது

குறித்த இடத்தில் மக்களுடன் இணைந்து முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் மற்றும் சமூக செயற்ப்பாட்டாளர் பீற்றர் இளஞ்செழியன் அவர்களும்மக்களுடன் கலந்துகொண்டனர்





சண்முகம் தவசீலன்

# யாழ் காரைநகரில் தேசிய பொங்கல் நிகழ்வு!

தேசிய நல்லிணக்க தைப்பொங்கல் விழா கடந்த திங்கட்கிழமை யாழ் காரைநகர் வியாவில் ஐய்யனார் ஆலயத்தில் தேசிய ஒருமைப்பாட்டு நல்லிணக்க அலுவலக இணைப்பாளர் கந்தசாமி கருணாகரன் ஒருங்கிணைப்பில் நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ச பங்குபெற்றுதலுடன் காலை 10 மணிக்கு இடம்பெற்றது.

குறித்த நிகழ்வில் நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ச தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வி ஆனந்தசங்கரி உற்பட்ட பலர் கலந்து கொண்டனர்.



சொர்ணலிங்கம் வர்ணன்





# தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தால் உலருணவுப் பொதிகள் விநியோகம்!

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் பொருளாதார ரீதியாக மிகவும் நலிவுற்றுள்ள குடும்பங்களுக்கு உலருணவுப் பொதிகளை வழங்கும் “அற்றார் அழிபசி தீர்த்தல்“ என்ற திட்டத்தைச் செயற்படுத்தி வருகிறது. “பகிர்ந்துண்டு வாழ்வோம்“ என்ற கருப்பொருளில் முன்னெடுக்கப்பட்டுவரும் இத் திட்டம் சண்டிலிப்பாய், சங்கானை மற்றும் உரும்பிராயில் இடம்பெற்றுள்ளது.

பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் இப்பகுதிகளில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட நூறு குடும்பங்களுக்கு அத்தியாவசிய உலருணவுகள் அடங்கிய பொதிகள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

இதற்கான நிதி அனுசரணையை அமரர் பொ.குமாரசாமி நினைவாக அவரது குடும்பத்தினர் வழங்கி வைத்துள்ளனர்.

கொரோனாப் பெருந்தொற்றுக் காலத்தில் ஏற்பட்ட தொழில்வாய்ப்பு இழப்புகளைத் தொடர்ந்து நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதாரப் பிரச்சினைகள் காரணமாக வறுமைக்கோட்டுக்குக் கீழே வாழுகின்ற மக்கள் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். இதனைக் கருத்திற்கொண்டு தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் கொரோனாப் பேரிடரின்போது ஆரம்பித்த “அற்றார் அழிபசி தீர்த்தல்“ திட்டத்தைக் கைவிடாது தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.








SUXUZ WEAR
சக்சஸ் வெயார்
New Clothes
New Fashion
Elegant Quality
இல. 102, நாவலர் வீதி, யாழ்ப்பாணம், இலங்கை.



suxuswear@gmail.com - Tel: 021 2222997

அரச அங்கீகாரம் பெற்ற வடமாகாணத்தின் முதல்தர கனரக வாகனப் பயிற்சிப் பாடசாலை.




# கிருபா லேணர்ஸ்

## කිරුබා ලෑර්නර්ස් KIRUBAA LEARNERS

- குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்.
- எழுத்துப்பரீட்சைக்கு விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்
- அசோக் லேடன் பஸ் மூலமான கனரக வாகனப் பயிற்சி
- மும்மொழிகளிலும், உங்களுக்கு விரும்பிய நேரங்களிலும் வாகன பயிற்சிகள்.
- சகல கிளைகளிலும் பயிற்சி வகுப்புக்கள்.
- தவணைமுறையில் கட்டணங்கள்.
- இரவிலும் வாகனப் பயிற்சிகள்.




**தலைமையகம்**
226, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்
021 222 4353
0777 22 5292

| சுன்னாகம் | நெல்லியடி | பருத்தித்துறை | பூநகரி |
|---|---|---|---|
| 021 224 2022 | 021 226 0700 | 021 226 1100 | 021 320 1818 |
| ஆவரங்கால் | சித்தங்கேணி | சாவகச்சேரி | மன்னார் |
| 021 222 6688 | 021 225 2500 | 021 227 0700 | 023 225 1656 |
| முழங்காவில் | கிளிநொச்சி | விஸ்வமடு | வவுனியா |
| 021 300 6544 | 021 228 5505 | 021 320 1515 | 024 222 7777 |

# SMART TECH SOLUTION





உங்கள் வீடு, அலுவலகம் மற்றும் கம்பனிகளுக்கு CCTV கண்காணிப்பு கமரா சிறந்த முறையில் அமைத்துத்தரப்படும். சிறந்த வாடிக்கையாளர் சேவை அனுபவம் வாய்ந்த தொழில்நுட்பவியலாளர்கள் CCTV installation துறையில் 15 வருட அனுபவம் வாய்ந்த நிறுவனம்.

## Our Services:

CCTV sales & Installation / Alarm system
Door Lock /Finger Print Attendance /Electric Fence / Local Networking / Computer Repair & Maintenance / Software Development



CCTV பொருத்துனர்களுக்கும் விற்பனையாளர்களுக்கும் விசேட விலைக்கழிவு வழங்கப்படும்.

Contact us for More Information
+94 77 684 3023

+94 71684 3023 / +94 21221 3023
No: 282, Hospital Road, Jaffna.
www.smarttechsolution.lk

**தேசியம்** பத்திரிகையின் மின்னிதழைப் பெற இவ் வாட்ஸ் ஆஃப் குழுவில் இணைந்து கொள்ளுங்கள்.

Whatsapp +94 76 567 3339

No. 27, Kannathiddy Road, Jaffna.Tel : 021 222 7557

SCAN ME